9th November 1966]

Orders regarding absorbing the staff under the malaria programme in these Blocks will issue separately.

6. The Government of India have proposed setting up of urban Family Planning Units for every 50,000 population. The question of opening Urban units will be decided in due course.

7. Under the Reorganised Family Planning set-up, there should be a State Family Planning Bureau to supervise effectively the implementation of the programme. The Government consider that as there is already a set-up at the headquarters for this Bureau, additional staff will be considered in due course.

8. Before incurring expenditure on the non-recurring items, Director of Public Health is requested to take into account the existing facilities and send proposals for expenditure on additional items required.

9. The expenditure should be debited to a sub-head of Account on Family Planning to be opened under "30. Public Health—I. Development Schemes—(i) Schemes in the Third Five-Year Plan A.—Public Health Establishment—XIV—Reorganised Pattern of Family Planning Programme for showing the expenditure on Reorganised Programme." The Director of Public Health is informed that the expenditure incurred on the Reorganised Family Planning Programme, sanctioned in the above paragraphs, should be allocated between the Government of India and the State Government in accordance with the instructions contained in the letters received from the Centre and the General share should be included in the quarterly statements of expenditure sent to the Government in the Finance (Planning) Department.

10. The expenditure is on a 'New Service' and the approval of the Legislature will be obtained in due course. Pending approval of the Legislature the expenditure will be met by an advance from the Contingency Fund, orders regarding which will be issued in the Finance (B.G.) Department. The Director of Public Health is requested to report immediately to the Finance (B.G.) Department the probable expenditure likely to be incurred on the scheme during the current year, with a copy to this Department.

11. This order issues with the concurrence of the Finance Department—*vide* its U.O. No. 1894 (A) P. & D. III/65-1, dated 1st December 1965.

(By order of the Governor.)

S. KRISHNASWAMI,
Secretary to Government.

[9th November 1966

தமிழ்நாடு அரசாங்கம்.

சுருக்கம்.

குடும்பக் கட்டுப்பாடு—இந்திய அரசு வகுத்துள்ள சீரமைத்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்—ஆணைகள்—பிறப்பிக்கப்பட்டன.

கல்வி—பொது நலத்துறை.

அரசாங்க ஆணை எண் : 2460. **தேதி : 8—12—1965.**

ஆணை : மாநிலங்கள் அனைத்திலும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்படும் முறையைச் சீர்தூக்கிப்பார்த்த பிறகு, இந்திய அரசு மேலே முதலில் குறிப்பிட்ட கடிதத்தில் சீரமைத்த திட்டம் ஒன்றை வகுத்து அதனை மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பாராமரிப்பு நிலையுடன் மாநில அரசாங்கங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று பரிவுரை செய்தது. இந்திய அரசு வகுத்துள்ள இத் திட்டத்தின் செயல் நோக்கங்களாவன :—

இந்தியாவின் பிறப்பு விகிதத்தை கூடிய விரைவில் 50 சத விதம் குறைக்குமளவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரைவில் செயல்படுத்துதல் ;

மேலும், நம் நாட்டில் திருமணமானவர்களில் 90 சத விதத்தினருக்கு அடியிற்கண்ட மூன்று அடிப்படை நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதும் அதன் நோக்கமாகும் :—

(1) அளவான குடும்பமே ஆனந்தக் குடும்பம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுதல் ;

(2) குடும்பக் கட்டுப்பாடு முறைகளை ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து வைத்திருத்தல் ;

(3) குடும்பக் கட்டுப்பாடு சாதனங்கள் எளிதில் கிடைக்கச் செய்தல்.

இந்த வேலைத் திட்டத்தை நன்கு பரிசிலித்து, அரசாங்கம் அடியிற்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கின்றது.

2. இந்திய அரசு வகுத்துள்ள இப் புதிய வேலைத் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் படிப்படியாக நிறைவேற்ற அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் பராமரிப்பு நிலையை அடைந்துள்ள, ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகிற வட்டாரங்களில் இவ் வேலைத் திட்டம் முதற்கண் நிறைவேற்றப்படும். தற்சமயம் அத்தகைய வட்டாரங்கள் 125 உள்ளன. இவ் வட்டாரங்களில் சீரமைக்கப் பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் உடனடியாகச் செயல் படுத்தப்படும். இந்த 125 வட்டாரங்களில் சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பொது நலத் துறை நெறியாளர் பணிந்தனுப்பியுள்ள செயற்குறிப்புகளுக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்து, அடியிற்கண்டவற்றிற்கு அனுமதி வழங்குகின்றது :—

(அ) இவ் வட்டாரங்களில் 125 தலைமைக் கிராமக் குடும்பக் கட்டுப்பாட்டு நிலையங்களை செயற்படுத்துதல் ;

9th November 1966]

(ஆ) இவ் வட்டாரங்களில் 10,000 மக்களுக்கு ஒரு நிலையம் என்ற கணக்கில் 1,024 துணை நிலையங்களை ஏற்படுத்துதல். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் தற்போது செயல்பட்டு வரும் மகப்பேறு நிலையங்களும் மேற்கூறிய 1,024 துணை நிலையங்களில் அடங்கியவையாகக் கணக்கிட்டு, அவற்றிற்கு 109 சத விதம் மத்திய உதவி கோரப்படும். இந்த ஏற்பாடு செயலுக்குவரினும் தற்போதைய நிர்வாக அமைப்பு அப்படியே இருக்கும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன்பிருந்ததுபோல் பணியாளர் மீது முழு அதிகாரம் தொடர்ந்து இருக்கும்.

அடியிற்கண்ட பணியாளர்களை நியமனத் தேதியிலிருந்து 28—2—1966-வரை தற்காலிகமாக நியமித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அவர்களின் சம்பளம், படிகள் குறித்த விவரம் வருமாறு :

தலைமைக் கிராம குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒவ்வொன்றிற்கும்—ஆரம்பச் சுகாதார நிலையம் ஒவ்வொன்றிலும் தற்போதுள்ள உதவி சர்ஜன் (ஆண்) தவிர, அடியிற்கண்டவர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

* (அ) உதவி சர்ஜன் (பெண்) ஒன்று.

ரூ. 300—15—450—25—575 மற்றும் அகவிலைப் படி மாதம் ஒன்றுக்கு ரூ. 50, கிராமப் படி மாதம் ஒன்றுக்கு ரூ. 50 மற்றும் வீட்டு வாடகைப் படி.

† (ஆ) வட்டாரக் கல்வி நலப்பரப்பு அதிகாரி (சுகாதார இன்ஸ்பெக்டர்—செலக்‌ஷன் கிரேடு)—ஒன்று.

ரூ. 200—10—300 மற்றும் அகவிலைப் படி, வீட்டுவாடகைப் படி.

*இப் பதவிக்கு செலக்‌ஷன் கிரேடு சுகாதார இன்ஸ்பெக்டரையே நியமிக்க வேண்டும் இவர் குடும்பக் கட்டுப்பாட்டு வேலைக்குப் பொறுப்பு வகிப்பார். மேலும், கிராம நல வேலைத் திட்டங்கள் சிலவற்றைக் கவனிப்பதுடன் குடும்பக் கட்டுப்பாட்டு வேலையை மேற்பார்வை செய்வதில் மருத்துவ அதிகாரிக்கு இவர் உதவி செய்வார். இவ் வேலைத்திட்டத்தின்கீழ் செலக்‌ஷன் கிரேடு பதவி அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில், வட்டாரத் தலைமை இடங்களில் உள்ள சுகாதார இன்ஸ்பெக்டர்கள் பதவி இருக்காது. பொதுநலத் துறை 30—8—1965 அன்று வெளியிட்ட 2071 எண்ணுள்ள அரசாங்க ஆணையில் அனுமதி வழங்கப்பட்ட துணை நர்ஸ் மருத்துவச்சி பதவியை இப்பதவியாகக் கொள்ள வேண்டும்.

†தற்போது மலேரியா ஒழிப்பு தேசிய திட்டத்தின்கீழ் செயல்படும் கண்காணிப்புப் பணியாளர்களை இப்பதவிக்கு நியமிக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்கள் தற்போது நடத்தும் பேறுகால நிலையங்களில் செயல்படும் பணியாளர்கள் இவ் வேலையில் இருப்பதாகக் கொள்ளப்படுவர்.

(அ) எழுத்தர்—கணக்கர்—தட்டச்சர்—ஒன்று.

ரூ. 90—4—110—3—140. தட்டச்சுத் தகுதிக்காக, தனிச் சம்பளம் ரூ. 10, மற்றும் வீட்டு வாடகைப் படி.

* (ஆ) துணை நர்ஸ்—மருத்துவச்சி—ஒன்று.

ரூ. 80—3—110—2—120. மற்றும் அகவிலைப் படி, மாதம் ஒன்றுக்கு ரேஷன் படி ரூ. 30. நிகராடைப் படி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75.

[9th November 1966

துணை நிலையங்கள் ஒவ்வொன்றிற்காகவும்—

* (1) ஆதார சுகாதாரப் பணியாளர்—ஒன்று.

ரூ. 80—3—110—2—120, மற்றும் அகவிலைப் படி; வீட்டு வாடகைப் படி.

(2) துணை நர்ஸ்-மருத்துவச்சி—ஒன்று.

ரூ. 80—3—110—2—120 மற்றும் அகவிலைப்படி, மாதம் ஒன்றுக்கு ரூ. 30 ரேஷன் படி, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75 நிகராடைப் படி.

3. தலைமைக் கிராம குடும்பக் கட்டுப்பாட்டு பிரிவுகளையும், துணை நிலையங்களையும் தவிர, இரண்டு ஆதார சுகாதார பணியாளர்கள், இரண்டு துணை நர்ஸ்—மருத்துவச்சிகள் ஆகியோரது வேலையை மேற்பார்வை செய்வதற்காக 20,000 மக்கள் தொகைக்கு ஒருவர் வீதம் நேரிடப் பணியாளர்களை நியமிக்கவும் இந்திய அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. அவர் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், கிராம நல வேலை, மலேரியா ஒழிப்பு வேலை ஆகியவற்றைக் கவனிப்பார். மாநில அரசாங்கம் இந்திய அரசின் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, 125 வட்டாரங்களிலும் 512 குடும்பக் கட்டுப்பாட்டு நல இன்ஸ்பெக்டர் பதவிகளை நியமனத் தேதியிலிருந்து 28—2—1966 வரை தற்காலிகமாக ஏற்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. மலேரியா ஒழிப்பு தேசீயத் திட்டத்தின்கீழும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செயல்பட்டு வரும் 171 சுகாதார இன்ஸ்பெக்டர்களும் 341 கண்காணிப்பு இன்ஸ்பெக்டர்களும் இப் பதவிகளில் நியமிக்கப்படுவர். இவர்களது சம்பள விகிதங்கள் வருமாறு :—

(1) சுகாதார இன்ஸ்பெக்டர்கள்—ரூ. 100—5—200 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(2) கண்காணிப்பு இன்ஸ்பெக்டர்கள்.—ரூ. 90—3—105—4—125 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

அடியிற்கண்ட தொடர்ச் செலவுகளையும் தொடராச் செலவுகளையும் மேற்கொள்ள அரசாங்கம் அனுமதி வழங்குகின்றது.

125 கிராமக் குடும்பக் கட்டுப்பாடு பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தொடர்ச் செலவுகள் : (ஆண்டொன்றுக்கு)

கருத்தடைச் சாதனங்கள்—ரூ. 4,600.

சில்லறைச் செலவினங்கள்—ரூ. 6,000.

தொடராச் செலவுகள் : (நிலையம் ஒன்றுக்கு)

கருவிகள், முதலியன—ரூ. 2,200.

1,024 துணை நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும்.

தொடராச் செலவுகள் : (நிலையம் ஒன்றுக்கு)

கருவிகள், முதலியன.—ரூ. 2,200.

9th November 1966]

4. சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குடும்பக் கட்டுப்பாட்டு பிரிவுகளும், துணை நிலையங்களும் சரிவரச் செயல் படுகின்றனவா என்று கவனித்துக்கொள்ள, ஒவ்வொரு மாவட்டத்திலும் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்று இந்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது. இம்மாநிலத்திலே 12 மாவட்டங்களில் இத்தகைய கழகங்களை நிறுவுவது குறித்து செயற் குறிப்புகளை பொதுநலத் துறை நெறியாளர் அனுப்பியுள்ளார். அரசாங்கம் அவரது பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு, நீலகிரி, தர்மபுரி, சென்னை மாவட்டங்கள் நீங்கலாக இம் மாநிலத்தில் 11 மாவட்டங்களில் மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகங்களை உடனடியாக நிறுவ அவருக்கு அனுமதியளித்துள்ளது.

இக் கழகங்களுக்காக அடியிற்கண்ட பணியாளர்கள் நியமனத் தேதியிலிருந்து 28-2-1966 வரை தற்காலிகமாக நியமனம் செய்யவும் அதற்கு அவசியமான செலவை மேற்கொள்ளவும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒவ்வொன்றிற்கும்:

*(1) மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டுச் சுகாதார அதிகாரி.—ஒருவர்.

ரூ. 450—25—800 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(2) உதவி சர்ஜன்கள் (சுற்றுப் பயண அறுவை சிகிச்சை பிரிவு).--இருவர்.

ரூ. 300—15—450—25—575 மற்றும் அகவிலைப் படி மாதமொன்றுக்கு இதர நஷ்ட ஈட்டுப் படி ரூ. 50, வீட்டு வாடகைப் படி.

* மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின்கீழ தற்போது செயல்பட்டுவரும் மேற்பார்வை பிரிவு அதிகாரிகள் இப் பதவிகளில் இருப்பதாகக் கொள்ளவேண்டும்.

(3) மாவட்டக் கல்வி நலப் பரப்பு அதிகாரி (தற்போதுள்ள குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரி).—ஒருவர்.

ரூ. 250—15—400 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(4) புள்ளி விவர உதவியாளர்.—ஒருவர்.

ரூ. 180—5—200—10—250 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(5) நர்ஸ் (ஊர் சுற்றும் வாசெக்டமி அறுவை சிகிச்சைப் பிரிவுக்காக).—ஒருவர்.

ரூ. 140—5—220 மற்றும் அகவிலைப் படி, மாதமொன்றுக்கு ரூ. 30 ரேஷன் படி, மாதமொன்றுக்கு ரூ. 3 சலவைப் படி, ஆண்டொன்றுக்கு ரூ. 75 நிகராடைப் படி.

[9th November 1966

(6) துணை நர்ஸ்-மருத்துவச்சி (சுற்றுப் பயணப் பிரிவுக்காக).—ஒருவர்.

ரூ. 80—3—110—2—120 மற்றும் அகவிலைப் படி, மாதமொன்றுக்கு ரூ. 30 ரேஷன் படி; மாதமொன்றுக்கு ரூ. 3 சலவைப் படி; ஆண்டொன்றுக்கு ரூ. 75 நிகராடைப் படி.

(7) அறுவைக்கூட உதவியாளர் (சுற்றுப் பயணப் பிரிவுக்காக).—ஒருவர்.

ரூ. 70—2—100 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(8) திரையிடு கருவி இயக்குநர்.—ஒருவர்.

ரூ. 125—3—140—5—150 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(9) டிரைவர்.—இருவர்.

ரூ. 70—1—80 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(10) தூய்மை செய்பவர் (கிளீனர்)—இருவர்.

ரூ. 50—1—60 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி.

(11) எழுத்தர்.—ஒருவர்.

ரூ. 90—4—110—3—140 மற்றும் அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி. (ஆண்டொன்றுக்கு)

கருத்தடைச் சாதனங்கள்.—ரூ. 1,500.

சில்லறைச் செலவுகள்.—ரூ. 10,260.

தொடராச் செலவுகள் :

கருவி வண்டிகள் முதலியன.—ரூ. 1,12,000.

தற்போதுள்ள மாவட்டக் குடும்பக் கட்டுப்பாட்டு அதிகாரியின் பதவிப் பெயர் மாவட்ட கல்வி நலப் பரப்பு அதிகாரியென மாற்றப்படும் எனவும் கிராமக் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படும் மாவட்ட கல்வி நலப் பரப்பு அதிகாரிகள் இருவரது பதவிகளில் ஒரு பதவி இப் பதவி எனக் கொள்ளப்பட வேண்டுமெனவும் அரசாங்கம் கட்டளையிடுகின்றது. மற்றொரு பதவிக்கு ஒருவரை நியமிப்பது குறித்து ஆணைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும்.

பொதுநலத் துறை 10—11—1965 அன்று வெளியிட்ட 2350 அரசாங்க ஆணையின்கீழ் மாவட்டங்களில் பிறப்பு இறப்பு விவரங்களைச் சேகரிப்பதற்காக நியமிக்க அனுமதிக்கப்பட்ட புள்ளி விவர இன்ஸ்பெக்டரது பணி குடும்பக் கட்டுப்பாடு வேலைக்காகவும், பயன்படுத்தப்பட்டு, அவரது பதவி 4-வது இனத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பதவியாகக் கொள்ளப்பட வேண்டும்.

9th November 1966]

5. காந்தி கிராமத்தில் உள்ள கிராமச் சுகாதாரக் குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம் ஆறு வட்டாரங்களில் குடும்பக் கட்டுப் பாட்டு வேலைத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது.

(1) ஆத்தூர்.

(2) திண்டுக்கல்.

(3) அனங்கா நல்லூர்.

(4) ரெட்டியார் சத்திரம்.

(5) வத்திலக் குண்டு.

(6) வாடிப்பட்டி.

இவ் வட்டாரங்களில் மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் செயல் படும் பணியாளர்களை இப் பதவிக்கு நியமனம் செய்வது குறித்து ஆணைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும்.

6. 50,000 மக்கள் தொகைக்கு ஒரு பிரிவு வீதம் நகர குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை நிறுவுவது குறித்தும் இந்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது. இத்தகையப் பிரிவுகளை துவக்குவது பற்றி நாளடைவில் முடிவு செய்யப்படும்.

7. சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் இத் திட்டம் சரிவர நிறைவேற்றப்படுகின்றதா என்று கவனிக்க மாநிலக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். தலைமை அலுவலகத்தில் இக் கழகத்திற்கான நிர்வாக அமைப்பு ஏற்கனவே செயல்பட்டு வருவதால், கழகப் பணி யாளர் நியமிப்பது குறித்து நாளடைவில் தீர்மானிக்கப்படும்.

8. தொடராச் செலவு குறித்து செலவு மேற்கொள்ளுமுன், தற்போதுள்ள வசதிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மேற் கொண்டும் தேவைப்படும் செலவுத் தொகைக்கான செயற் குறிப்புகளை அனுப்புமாறு பொதுநலத் துறை நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

9. இச் செலவு "30, பொது சுகாதாரம் . . . - வளர்ச்சித் திட்டங்கள்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள்—பொது நலப் பணியாளர்—சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம்" என்பதின்கீழ் துவக்கப்படவிருக்கின்ற குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் குறித்த கணக்கின் உள் தலைப்பிற்குப் பற்றெழுதப்பட வேண்டும். சீரமைக்கப்பட்ட குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்திற்காக மேற்சொன்ன பத்திகளில் அனுமதி வழங்கப்பட்ட செலவுத் தொகை, மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற கடிதங்களில் கண்டுள்ள கட்டளைகளை அனுசரித்து இந்திய அரசு மாநில அரசாங்கம் ஆகியவற்றிடையே பங்கிடப்பட வேண்டுமென்றும் . . . . மத்திய அரசின் பங்கு அரசாங்க நிதித் (திட்ட) துறைக்கு அனுப்பப்படும் காலாண்டுச் செலவு விவர அறிக்கைகளில் சேர்க்கப்பட வேண்டுமென்றும் பொது சுகாதார நெறியாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

[9th November 1966

10. இச் செலவு புதுப் பணியைக் குறித்ததாகும். இச் செலவு குறித்து சட்டப் பேரவையின் அனுமதி நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் அனுமதியை முன்நோக்கி, இச் செலவு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முதற்கண் முன் தொகை வழங்கப்படுவதன் மூலம் சரிக்கட்டப்படும். இது குறித்து ஆணைகளை அரசாங்க நிதித் துறை (BG) துறைக்கு உடனடியாக அறிவிப்பதுடன் இத் துறைக்கும் அதன் நகல் ஒன்றை அனுப்புமாறு பொது சுகாதாரத் துறை நெறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

11. இந்த ஆணை நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகின்றது. அத் துறையில் 1—12—1965 தேதியுள்ள 1894 (A) **P & D III/65-1** என் கடித முறையில் அலுவலகக் குறிப்பைப் பார்க்கவும்.

APPENDIX XI.

[*Vide* answer to starred question No. 567 at page **576.**]

Government hospitals where Orthopaedic Centres are functioning.	Orthopaedic centres run by voluntary institutions.	Grants paid to Iswari Prasad Dattatreya Orthopaedic Centre, Madras.
(1)	(2)	(3)
1 Government General Hospital, Madras. 2 Government Stanley Hospital, Madras. 3 Government Royapettah Hospital, Madras.	Iswari Prasad Dattatreya Orthopaedic Centre run by the Andhra Mahila Sabha, Madras.	1 Grant to cover the deficit in the maintenance charges during 1961–62—Rs. 3,500.
4 Madurai Medical College Hospital, Madurai.		2 Grant to cover the deficit in the maintenance charges during 1963–64—Rs. 2,200.
5 Thanjavur Medical College Hospital, Thanjavur.		3 Grant to meet half the deficit for the year 1964–65—Rs. 7,600.

No request has been received so far by the Government for payment of grant towards meeting the entire cost of medicines incurred by the Iswari Prasad Dattatreya Orthopaedic Centre run by the Andhra Mahila Sabha, Madras.